

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.12.2024) தலைமைச் செயலகத்தில், ஸ்பின்னிங் மில் நவீனமயமாக்கலுக்கு அரசு மானியத்தை உயர்த்தி வழங்கியமைக்காக தென்னிந்திய ஆலைகள் சங்கத்தின் (Southern India Mills Association) தலைவர் டாக்டர் எஸ்.கே. சுந்தர்ராமன், முன்னாள் தலைவர் டி. ராஜ்குமார், South India Spinners Association கௌரவ செயலாளர் எஸ். ஜெகதீஷ் சந்திரன், மறுசுழற்சி துணிநூல் கூட்டமைப்பு தலைவர் எம். ஜெயபால், Open End Spinning Mills Association தலைவர் ஜி. அருள்மொழி, தென்னிந்திய ஆலைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் கே. செல்வராஜு மற்றும் நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி வே. அமுதவல்லி, துணிநூல் துறை இயக்குநர் திருமதி ஆர். லலிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (16.12.2024) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்கள் சந்தித்து, குழுவின் சார்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அறிக்கைகளை சமர்ப்பித்தார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.12.2024) முகாம் அலுவலகத்தில், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி உருவாக்கியுள்ள திராவிட வரலாற்று சுவடுகளுடனான 2025ஆம் ஆண்டுக்கான நாட்காட்டியை வெளியிட்டார். இந்நிகழ்வில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி. ராஜா, ஆலோசகர் கோவி. லெனின் மற்றும் கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## பா.ஜ.க.வை எதற்குமே கண்டிக்காமல்

# வாய்ச்சவடால் விட்டுக்கொண்டிருக்கிறார் பழனிசாமி!

### அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி!

சென்னை, டிச.17-

"பா.ஜ.க.வை எதற்குமே கண்டிக்காமல் வாய்ச்சவடால் விட்டுக் கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி" என்று சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் பதிலடி கொடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:



முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல 'வாழைப்பழ காமெடியை' போல அறிக்கையிலும் சரி மேடையிலும் சரி சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறார் எதிர்கட்சித்தலைவர் பழனிசாமி! திமுக அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சமத்துவ-சமூக மேம்பாட்டு செயல்திட்டங்களால் தமிழ்நாட்டு மக்கள் முதலமைச்சருக்கான சிம்மாசனத்தை அளித்திருக்கிறார்கள். குரலை உயர்த்தி கைகளைச் சுழற்றி பேசினால் மக்களை ஏய்த்து, திமுகவை வீழ்த்திவிடலாம் என்று பகல் கனவு கண்டு கொண்டிருக்கிறார் பழனிசாமி! ஆட்சிக்காகவும் அதிகாரத்திற்காகவும் சசிகலா தொடங்கி, ஓபிஎஸ் வரை ஒவ்வொருவராக காலை வாரிவிட்ட நீண்ட துரோக வரலாறு உங்களுடையது! ஆட்சிக்காக பாஜகவிடம் அண்டிப் பிழைத்து மாநிலத்தின் உரிமைகளை எல்லாம் அடகு வைத்துவிட்டு இப்பொழுதும் கூட பாஜகவை எதற்குமே கண்டிக்காமல் 'வலிக்காமல் வலியுறுத்தி விட்டு' மேடையில் வாய்ச்சவடால் விட்டுக் கொண்டிருக்கும் மிஸ்டர் கோட்டைச் சாமியை யாராவது எழுப்பி விடுங்கள்.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி அவர்கள் தமது சமூக வலைத்தளத்தில் பதி விட்டுள்ளார்.

## திருப்பத்தூர் மாவட்டத்தில்

# தொகுதிகள்தோறும் வாக்குச் சாவடிகளுக்கு பூத் கமிட்டி அமைக்கும் பணி !

### மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திருப்பத்தூர், டிச. 17-

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட ஆம்பூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒவ்வொரு வாக்குச்சாவடிகளுக்கும் பூத் கமிட்டி (BLC) அமைக்கும் பணியை தொடங்கிட வேண்டும்.

பூத் கமிட்டியானது 100 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச்சாவடி குழு உறுப்பினர் (BLC) என்ற அடிப்படையில் அமைக்க வேண்டும். உதாரணமாக ஒரு வாக்குச்சாவடியில் 700 வாக்காளர்கள் இருப்பின் ஒரு BLA2 தவிர 7 BLC இருக்க வேண்டும். 1100 வாக்காளர்கள் இருப்பின் ஒரு BLA2 தவிர 11 BLC இருக்க வேண்டும்.



BLC க்களை மேலாண்மை செய்யும் பொறுப்பு BLA2 வுக்கானது என்பதால் அவர்களுக்கு 100 வாக்காளர்கள் வழங்கப்படக் கூடாது.

தங்களுக்குரிய 100 வாக்காளர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பது, அரசின் நலத்திட்டங்களை தங்களுக்குரிய 100 வாக்காளர்களிடம் கொண்டு சேர்ப்பது, தேர்தல் நாளன்று அவர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வருவது வரையிலான பணிகளை பூத் கமிட்டியை சேர்ந்தவர் மேற்கொள்ள வேண்டும் என்பதால் தகுதியானவர்களை தேர்ந்தெடுத்து பூத் கமிட்டியில் இணைக்க வேண்டும்.

ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே பூத் கமிட்டியில் இடம் பெற வேண்டும்.

வாக்குச்சாவடி குழுவில் கட்டாயம் ஒரு இளைஞரணி, மகளிரணி, தகவல் தொழில்நுட்ப அணியினர் இருக்க வேண்டும்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது 20 முதல் 25 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு பொறுப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தனர். அப்பொறுப்பாளர்களையும், BLA2 க்களையும் உடன் வைத்துக்கொண்டு 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வாக்காளர்களுக்கு உட்பட்ட BLC க்களை நேரில் அழைத்து அவர்களிடம் விவரங்களை தொகுதி பார்வையாளர்கள் முழுமையாக சரிப்பார்க்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இப்பணிக்கு தொகுதி பார்வையாளர்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் ஒரு BLA2, 100 வாக்காளர்களுக்கு ஒரு BLC என பூத் கமிட்டி, 20 முதல் 25 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு பொறுப்பாளர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியவற்றுக்கான தகுதியானவர்களை கண்டறிந்து நிரப்பி ஜனவரி 3ஆம் தேதிக்குள் பட்டியலை இறுதி செய்து அனுப்பிட வேண்டும் என நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையின் காரணமாக வெள்ளநீர் சூழ்ந்துள்ள பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு வரும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான திருமிகு கனிமொழி கருணாநிதி அவர்கள், தூத்துக்குடி திருச்செந்தூர் சாலையில் உள்ள ஆத்தூர் தாமிரபரணி ஆற்றுப் பாலம், ஏரல் குரும்பூர் தாமிரபரணி ஆற்றுப் பாலம் ஆகியவற்றை ஆய்வு செய்து, ஆத்தூரில் உள்ள மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தெற்கு ஆத்தூரைச் சேர்ந்த மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டறிந்தார். ஆய்வின்போது, மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளருமான அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி அமிர்தராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி,மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி மற்றும் பலர் உடனிருந்தனர்.

## நெய்வேலி நிலக்கரிச் சுரங்க

# ஒப்பந்தத் தொழிலாளர் ஊதியம் குறித்து அரசு நடவடிக்கை என்ன?

### மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, டிச.17-

"நெய்வேலி நிலக்கரிச் சுரங்க ஒப்பந்த தொழிலாளர்களின் ஊதியம் குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?" என்று நாடாளுமன்ற மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் ஒப்பந்த தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

அதன் விபரம் வருமாறு :-

கேள்வி:

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து ஒன்றிய அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டிருந்தால் அதன் விவரம்.



நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் தினக் கூலி தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் 20 முதல் 24 நாள்கள் குறைந்தபட்ச வேலைநாள்களை வழங்க ஒன்றிய எடுத்துள்ள நடவடிக்கைகள்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் கடந்த 4 ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள், தினக்கூலி தொழிலாளர்களின் விவரம், அவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய விவரம்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்கள், அவர்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஊதிய விவரம்.

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் ஜி.கிஷன் ரெட்டி அளித்த பதில்:

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கடந்த 2021 மார்ச் வரை 11,379 நிரந்தர தொழிலாளர்களுக்கு 2,688.36 கோடி ரூபாய், 2022 மார்ச் வரை 11246 நிரந்தர தொழிலாளர்களுக்கு 2,624.48 கோடி ரூபாய், 2023 மார்ச் வரை 10781 நிரந்தர தொழிலாளர்களுக்கு 2,526.32 கோடி ரூபாய், 2024 மார்ச் வரை 10368 நிரந்தர தொழிலாளர்களுக்கு 2,646.73 கோடி ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

இதுபோல, சுரங்கத்தின் மேல் பகுதியில் பணிபுரியும் திறனில்லா தொழிலாளர்களுக்கு 25067 ரூபாய், பகுதி திறன் உடைய தொழிலாளர்களுக்கு 26679 ரூபாய், திறன் உடைய தொழிலாளர்களுக்கு 28161 ரூபாய், திறன்மிகு தொழிலாளர்களுக்கு 30522 ரூபாய் மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

சுரங்கத்தில் பணிபுரியும் திறனில்லா தொழிலாளர்களுக்கு 26289 ரூபாய், பகுதி திறன் உடைய தொழிலாளர்களுக்கு 27901 ரூபாய், திறன் உடைய தொழிலாளர்களுக்கு 30652 ரூபாய், திறன்மிகு தொழிலாளர்களுக்கு 33460 ரூபாய் மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

சுரங்கமல்லாத பகுதியில் பணிபுரியும் திறனில்லா தொழிலாளர்களுக்கு 24937 ரூபாய், பகுதி திறன் உடைய தொழிலாளர்களுக்கு 26185 ரூபாய், திறன் உடைய தொழிலாளர்களுக்கு 27641 ரூபாய், திறன்மிகு தொழிலாளர்களுக்கு 29248 ரூபாய் மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் 2021ம் ஆண்டு ஏப்ரல் வரை 14992, 2022ஆம் ஆண்டு ஏப்ரல் வரை 15012, 2023ம் ஆண்டு ஏப்ரல் வரை 15736, 2024 ம் ஆண்டு ஏப்ரல் வரை 16142 ஒப்பந்த தொழிலாளர்கள் பணிபுரிந்தனர்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.



கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் எஸ்.கிருத்திகா தங்கப்பாண்டி ஏற்பாட்டில் திருப்பரங்குன்றம் மேற்கு ஒன்றியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகங்களில் உள்ள மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர் என 1200 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இதில் திருப்பரங்குன்றம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி தலைமைக் கழக பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில சார்பு அணி நிர்வாகிகள், திருப்பரங்குன்றம் மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மகளிர் அணியினர் மற்றும் பொதுமக்கள் என திரளான கழகத்தினர் கலந்து கொண்டனர்.